கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மாசி மாத இதழ்
NEWS BULLETIN
FEBRUARY 2026
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
28/02/26	தமிழ்த்திறன் போட்டிகள் நடைபெறும்.

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am





மகா சிவராத்திரி

சிவபெருமான் ஜோதி லிங்கமாகத் தோன்றிய நாள், பார்வதி தேவியைத் திருமணம் செய்த நாள், மற்றும் ஆலகால நஞ்சை உண்டு உலகைக் காத்த நாள் எனப் பல சிறப்பம்சங்களைக் கொண்டது.

சிவனாரின் திருவடி மற்றும் திருமுடி காணப் புறப்பட்ட திருமாலுக்கும், பிரம்மதேவருக்கும் பாடம் கற்பிக்க நினைத்த சிவபெருமான், லிங்கோத்பவராக பெரும் ஒளிப்பிழம்பாகத் தோன்றிக் காட்சியளித்ததும் அன்றுதான். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும், கண்ணப்ப நயனார் சிவபெருமானுக்காகத் தனது கண்களைத் தானமாக அளித்ததும் இந்த நாள்தான். சிவபெருமான் தனது பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனைக் காலால் உதைத்த தினம் சிவராத்திரி. இந்நாளில் இரவு முழுவதும் விழித்திருந்து, விரதமிருந்து சிவனை வழிபட, துன்பங்கள் நீங்கி முக்தி கிடைக்கும் என நம்பப்படுகிறது.

15/02/2026 அன்றைய தினம் கொவன்றீஸ்வர பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக கர்நாடக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "நுண்கலைமானி" ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் அவர்களின் மாணவிகள் செல்விகள் கௌரி கலாதரன், வர்ஷிதா ஜெயசங்கர், கவிநயா சுரேஷ்தாஸ், தருண்யா பகீரதன், மோனிக்கா ஜெய்கணேஷ், ஸ்ரீசந்தனா பிரபுசங்கர் ஆகியோர் பக்திப் பாடல்களை வழங்கியிருந்தனர்.



கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

World peace and Harmony அமைப்பினரால் உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து பிரதி வியாழக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு Zoom இணைய வழியில் நடாத்தப்படும் கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எமது பாடசாலை நிகழ்வுகளை நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் அவர்கள் தொகுத்து வழங்கி வருகின்றார்.



05/02/2026 அன்று நடைபெற்ற கதம்ப



நிகழ்வில், செல்வன் அட்சன் அரவிந்தன் திருக்குறள்களையும் செல்வன் டெனீஷ்யன் றொபின்சன் அமலதாஸ் பாடசாலைக் கீதத்தையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அர்னிஷன் ஜெரோம் நிஷாந்தன் சுரத்தட்டு இசையையும், வயலின்




மற்றும் வீணை ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி கௌரி கலாதரன் வீணை இசையையும் வழங்கியிருந்தனர்.

12/02/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், தமிழாசிரியை திருமதி ரஜனி யேசுராஜா அவர்களின் தரம் 8 மாணவர்களான செல்விகள் நிவிஷா ஸ்ரீகாந்தராசா, கவிநயா சுரேஸ்தாஸ், செல்வன் றெதுஷன் ரவீந்திரன் ஆகியோர் "வார இறுதி நாட்கள்" என்ற தலைப்பில் உரையாடலையும்,





செல்வன் நிவேதன் நிதர்சன் தேவாரத்தையும், செல்வன் சரன்ஜித் அரவிந் திருக் குறளையும், செல்வி நிவேதிதா புவனேஸ்குமார் காக்கைச் சிறகினிலே.. என்ற பாரதியார் பாடலையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் விஷால் காண்டீபன் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.



19/02/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் ஆதிரன் ரமேஷ் நூலகம்






பற்றிய பேச்சையும், செல்வி தாரகி ரவிக்குமார் வானவில்லே... என்ற பாடலையும், செல்வி ஆராதனா ரமேஷ் பேச்சையும்,



சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் லக்ஸன் திருவரங்கன் சுரத்தட்டு இசையையும், வயலின் மற்றும் வீணை ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி தருண்யா பகீரதன் வயலின் இசையையும் வழங்கியிருந்தனர்.



26/02/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் லதுசன் திருவரங்கன் தேவாரத்தையும், செல்வி மோகித்ரா பிரபு கதையையும், செல்வி மாதுரி பகீஸ்வரன் யாதும் ஊரே.... என்ற பாடலையும்,

சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.

தமிழ்த்திறன் போட்டிகள்

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம் நடாத்திய தமிழ்த்திறன் போட்டிகள் 28/02/2026 அன்று நடைபெற்றன. அதற்கு நடுவர்களாக யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி அருணா பரமசுந்தரம் மற்றும் தமிழாசியைகளான திருமதி சிவஜா பிரபாகரன், திருமதி கிம்லா சுரேஷ், திருமதி சுமிதா தர்மேந்திரன், திருமதி ராஜினி பெர்னாண்டோ ஆகியோரோடு, கொவன்றியிலிருந்து திருமதி சோபிகா ரஜீவன் அவர்களும் நடுவர்களாகக் கலந்துகொண்டு போட்டிகளைத் திறம்பட நடாத்தியிருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



போட்டிகளில் உற்சாகத்தோடு கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு வெற்றிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

ஈழத்துப் புலமைகள்

கடந்த இதழ் தொடர்ச்சி ...(பாகம் 33)
கடந்த இதழிலே யாழ்ப்பாணம் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பற்றி பார்த்திருந்தோம் அதன் தொடர்ச்சியை இப்போது காண்போம்.

ஆறுமுகநாவலர்

பைபிளை மொழி பெயர்த்து வெளியிட்டமையால் மிக சிறப்பான மொழிநடை கொண்டவர் எனப் பாராட்டைப் பெற்றவர். அதே நேரத்தில் "ஆறுமுகம்" கிறிஸ்தவராக மாறிவிட்டதாக பிரச்சாரம் செய்யத் தொடங்கியதால், தாம் ஓர் சைவத்தமிழன் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் கிறிஸ்தவமதக் கண்டனங்களை எழுதிவெளியிட்டார். அதன் தாக்கத்தால் தமிழ்மொழிக் கல்வியைப் புகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. பீற்றர் பெர்சிவல் அவர்களின் ஆங்கிலப் பாடசாலையில் கற்பிக்கும் நேரத்திலேயே மாலைநேரப் பாடசாலை ஒன்றைத் தொடங்கி தமிழும் சைவமும் கற்பிக்கத் தொடங்கினார்.

இப்பாடசாலையில் கற்றவர்களில் சதாசிவம்பிள்ளை, நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகம்பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகம் செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சதாசிவம்பிள்ளையே நாவலரின் தரும நிலைகளைப் பரிபாலனம் செய்து வந்தார்.

இவர்களின்பின் இவரிடம் கற்றவர்கள் வித்துவ சிரோமணி ச.பொன்னம்பலப்பிள்ளையும், மா.வைத்திலிங்கம்பிள்ளை முதலானோராகும் இவர்களில் ச.பொன்னம்பலப்பிள்ளையே இலங்கையிலும், இந்தியாவிலும் பெயர் பெற்றவர். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலும், இந்தியா சிதம்பரத்திலும் சைவபிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார்.

வண்ணார்பண்ணை சைவபிரகாச வித்தியாசாலையில் வைத்திலிங்கம்பிள்ளை தலைமை ஆசிரியராக இருந்தார். சிதம்பரத்தில் நிறுவப்பட்ட சைவபிரகாச வித்தியாசாலையில் ச.பொன்னம்பலப்பிள்ளை கடமையாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மத பாதிரிகளின் பிரசாரத்தால் கிறிஸ்தவமதம் வேகமாகப் பரவியது. இதனால் சைவத்தை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காக சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ந்து சைவப் பிரச்சாரங்களை மேற்கொண்டார். இவரது முதல் பிரசங்கம் வண்ணார்பண்ணை சிவன் கோவில் வசந்த மண்டபத்தில் நடந்தது. அறிஞர்களும் சைவப் பெருமக்களும் விதந்து பாராட்டினர். தன்னுடன் பிரசங்கங்கள் செய்ய நல்லூர் வேங்கடபதி ஐயரின் மகன் கார்த்திகேய ஐயரை நியமித்து; தாம் ஒருவாரமும், ஐயர் மறுவாரமும் ஆகத் தொடர் பிரசங்கம் நடத்தினார். இவர்களது சொற்பொழிவு மிகவும் பிரபலம் அடைந்தது. கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பலர் மீண்டும் சைவத்திற்கு திரும்பியது இவரது சாதனையே.

(அடுத்த வாரம் தொடரும்)

ஆக்கம்
திரு மாணிக்கம் தவத்துரை(தேவா) ஆசிரியர்